APPENDIX V.

[*Vide* answer to starred question No. 551 at page 748]

The details of the technical assistance sought for are as follows :—

Technical assistance will be provided by West Germany in the shape of technical advice through foreign experts (German) as detailed below :—

(i) Adviser on Potato Cultivation, Soil Fertilization and Plant Protection, who shall also be the Head of the German Team.

(ii) One Agronomist to study Soil Physics and Agricultural Chemistry with particular reference to fixation of phosphates in the soils of the Nilgiris.

(iii) One Seed Specialist to advise on production and testing of seeds.

(iv) One technician for fruit and vegetable growing.

(v) One technician for rural water management and agricultural engineering.

Provision has been made to depute other experts as would be necessary as the programme develops. These experts will help to solve the major problems of the Nilgiris relating to important crops.

2. This project envisages the supply of technical equipment and other materials such as seeds, fertilizers, plant protection chemicals, equipments for soil testing laboratories, agricultural machinery and implements and also suitable transport.

3. The German Government will provide the means for training the Indian personnel connected under the programme in Germany. Under this programme, the Indian officers will receive training in :

(1) Potato Cultivation.

(2) Seed Technology.

(3) Horticulture.

(4) Soil Conservation.

(5) Agricultural Engineering.

Expenditure.—The total cost of the project for five years is estimated as Rs. 28·7 lakhs, of which Rs. 20·2 lakhs will be borne by the State Government and Rs. 8·5 lakhs by the West German Government.

[9th November 1966

வேண்டப்பட்டுள்ள தொழில் நுட்ப உதவி குறித்த விவரங்கள் வருமாறு:—

அந்நிய நாட்டு (ஜெர்மனி) வல்லுநர்கள் தொழில் நுட்ப ஆலோசனையை வழங்கும் முறையில் மேற்கு ஜெர்மனி வழங்கும் தொழில் நுட்ப உதவி விவரம் வருமாறு :—

(1) உருளைக்கிழங்கு பயிரிடுதல், உரமிட்டு மண் வளத்தை மேம்படுத்தல், பயிர்ப் பாதுகாப்பு பற்றிய ஆலோசகர்—இவர் ஜெர்மானிய குழுவின் தலைவராகவும் செயலாற்றுவர்.

(2) நீலகிரி மண்ணில் பாஸ்பேட்டுகளின் அளவை நிச்சயிக்க மண்வள பௌதீகத்தையும் வேளாண்மை ரசாயன இயலையும் ஆராய வேளாண்மைப் பொருளாதார வல்லுநர் ஒருவர்.

(3) விதைகள் உற்பத்தி—பரிசோதனை ஆகியவற்றைக் குறித்து ஆலோசனை கூற விதைப் பரிசோதனை வல்லுநர் ஒருவர்.

(4) பழ-காய்கறி உற்பத்தி அதிகரிப்புக்காகத் தொழில் நுட்ப வல்லுநர் ஒருவர்.

(5) கிராம நீர் ஆதார நிர்வாகத்திற்கும் வேளாண்மைப் பொறியியலுக்கும் தொழில் நுட்ப வல்லுநர் ஒருவர்.

இவ்வேலைத் திட்டம் நிறைவேற்றப்படுகையில், அவசியமான பிற நிபுணர்களை வரவழைக்க வகை செய்யப்பட்டுள்ளது. நீலகிரியில் முக்கியமான பயிர்கள் குறித்த பெரிய சிக்கல்களைக் களைய, இந்த வல்லுநர்கள் உதவி செய்வர்.

2. இத் திட்டத்தின்கீழ், தொழில் நுட்ப சாதனங்களும், விதைகள், உர வகைகள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், மண்வளச் சோதனை ஆய்வுக் கூடங்களுக்கான கருவிகள், வேளாண்மை யந்திரங்களும் சாதனங்களும் தகுந்த போக்குவரத்து சாதனங்களும் வழங்கப்படும்.

3. இந்த வேலைத் திட்டத்துடன் சம்பந்தப்பட்டுள்ள இந்திய அதிகாரிகளுக்கு ஜெர்மனியில் பயிற்சியளிக்க ஜெர்மன் அரசாங்கம் வகைசெய்யும். இத்திட்டத்தின்கீழ் இந்திய அதிகாரிகள் அடியிற்கண்டவற்றில் பயிற்சி பெறுவர் :—

(1) உருளைக்கிழங்கு பயிரிடுதல்.

(2) விதை உற்பத்தித் தொழில் நுட்ப இயல்.

(3) தோட்ட இயல்.

(4) மண்வளப் பாதுகாப்பு.

(5) வேளாண்மைப் பொறியியல்.

செலவு.—இத் திட்டத்திற்காக ஐந்தாண்டுகளுக்கு மொத்தம் ரூ. 28·7 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் ரூ. 20·2 லட்சம் செலவை மாநில அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். எஞ்சிய ரூ. 8·5 லட்சம் செலவை மேற்கு ஜெர்மனி அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்.